உ

கடவுள் துணை.

மறைக்காட்டம்மானை மாலையென்னும்

பரத்தையர்மாலை.

இஃது

ஆறுமுகதேசிகரால்

பார்வையிடப்பட்டு

—(*)—

ஆதிபுரி.

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற

பதிப்பிக்கப்பட்டது.

ஜய - ௵.

யெனும் பேர்கொண்டு, காமுகரைப்பணம்பறிக்கக்கற்றமாயை, மாமாயவேசியரைமறந்துநீங்கி, மறைக்காட்டிலம்மானே வணங்குவீரே (௨)

கைப்பொரு ளெல்லாமழியுமுடம்புக்கீனம், கண்களித்தவுறவினர்க்கும்கண்டபேர்க்குஞ், செப்பரியநகைக்கிடமாம் பாவமாகுஞ், செயதொழிலுக்கிசைகேடு சிலர்க்குக்கோபம், இப்படியேபரத்தையர்தமின்பமெல்லாம், இமைப்பொழுதுமவருடனே யிணங்கலாமோ, மைப்பாவுங் கண்டத்தானெம்பிரானை, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே. (௩)

தேளுக்குவிஷங் கொடுக்கில்வட்டமான, திருக்கைமீன்றனக்கு விஷத்திரண்டமுள்வால், நாளுக்குவிஷங்கடிகைமூன்றேமுக்கால், நற்பாம்புதனக்குவிஷம்நான்கேபல்லாம், வேளுக்குவிஷங்கையிற் புஷ்பபாணம், வேசியர்க்கெண்சாணுடம்பு விஷேமேகண்டீர், வாளுக்குநிகர்விழியாள் பாகத்தானே, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே, (௪)

பாம்புக்குப்பால்வார்த்துவளர்த்தபோதும், பாவிகாடனதுவிஷம்பற்றாது, வேம்புக்குத்தேன்வார்த்து வளர்த்தபோது, மேன்மேலுமமதன்கசப்புமேவிட்டோங்குந் தீம்புற்றபரத்தையர்க்குக்கோடிசெம்பொன்ஈயி,

தானுமவர் குணத்தைத்திருப்பலாமோ, வரம்பெற்றத் தீதறிவருமெம்பிரானை, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௫)

கடன்காரர்க்கைம்பது பொன்கொடுக்க வேண்டுங், கைமாற்றுமைந்துபணங் கொடுக்கவேண்டுங், குடங்காணும்சாராயமளந்துவாங்கிக் குடித்தபணம்பதினைந்துகொடுக்கவேண்டும், இடங்காணேம்கொடுக்கவென்றலிதற் கென்செய்வோ, மென்றுதெட்டிமெள்ளமெள்ளவிதமாவாக்குமடங்காதபரத்தையரைமற்றுநீங்கி மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௬)

ஒருபொழுதும்பிரிந்திருக்கமாட்டோமுப்பத், தொருநாள் விட்டெப்படிநீருரங்கப்போனீர், இருவருந்தானேத்தின்று கூடினேமே, எத்தனைகாலங்கூடியிருந்து வாழ்ந்தோம், பருவமிதுகிடைக்குமோ பாரீரன்பாற், பசப்புவார்பணம் பறிப்பார்பரத்தையரை, மருவுவதுஞ்சருவுவதும் வேண்டாமெங்கண், மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. (௭)

எத்தனைநாள்பிரிந்திருப்பே னுளவாயோலை, எழுதிவரக்காட்டினீரின்றுவந்தீர், பித்தனையானுனு மனங்கனிவுகாண்பேன், பேசாமலிருக்கின்றீர் பேய்கொண்டீரோ, இத்தனைகாலமுமில்லை யெங்கேகற்றீர்,என்றுதெ

ட்டும் வேசியனாயிகழ்ந்துநீங்கி, மத்தனைமான்மழுவேந்துமெம்பிரானை, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (அ)

தாய்சலிக்க வேசியர்க்குகொடுத்து கெட்டசாய்குடியோனைக் கிழவிச்சற்றேகண்டால், ஏசலுக்குவந்திரோவொருகாசுக்கும், இடமில்லாவெறு மூடரிங்கேன் வந்தீர்பூசலுக்குவந்திரோமதிகெட்டீரோ,போக்கிடம்வேறில்லைமப்பா போம்போமென்று, வாசலுக்குவாவொட்டாரவனைநீங்கி, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ

பெண்டாட்டிபகையாவாள் தகப்பனாரும், பெற்றவளும்வாய்திறந்து பேசமாட்டாள், கொண்டாட்டமாயிருந்தமையன்தம்பி, கோவிப்பாரன்னியருங்கூடச்சொல்வார், திண்டாட்டமாமுறவின் முறையாரெல்லாஞ், சீயென்பார்நாயென்பார் திருடனென்பார் வண்டாட்டமுள்ள பரத்தையனைவிட்டுமறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௯)

வீரவாளிப்பட்டுபொன்மைப்பட்டு வெண்பட்டுசெம்பட்டு வீதிப்பட்டு, சாரிமேகப்பட்டு மாடைவன்னத்தலையெழுத்து கிறையெழுத்துச்சந்த்ரகாவி, சேருமிளமாதுளம்பூ வன்னமென்னுஞ், சேலைகொடுத்தாலுமென்னசெய்தீரென்பார், வாருநீபரத்தையனைவிட்டுநீங்கி மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௰க)

கருதரியகனியிருக்கச்சிறுகாய்தேடிக், கையிலேகரும்பிருக்கவேம்புதேடித் தெரியவிளக்கிருக்க மின்மினியைத்தேடித், தேனிருக்கசாராயந்தேடுவார்போற், பரிவுடையமனையாட்டியிருக்கமாய்ப், பரத்தையரைத்தேடிநொந்துபணமுந்தோற்று, மருவுபெரும்பாவிகளாய் போகவேண்டாம், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௰௨)

தெள்ளமுதமிருக்க விஷந்தேடிவாழை, செய்யகனியிருக்ககாஞ்சிரங்காய்தேடி வெள்ளிலையாக்கிருக்கத் தம்பலம்போய்த்தேடி, மெலலியபொற்கலை யிருக்ககந்தைதேடி உள்ளதிருமாதுபோ லழகுங்கற்பும், உள்ள மனையாளிருக்கப் பரத்தைமார்க்கு, மள்ளியகைப்பொருள் கொடுத்துவருத்தவேண்டா, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௰௩)

காட்டுக்கேயெறிக்க நிலாபெருகுமாற்றிற், கரைத்தபுளிகமர்வெட்டிப் பிற்கவிழ்க்கபால்பாழ் வீட்டுக்கேயிடும்விளக்கு மெள்ளமாக, விழலுக்குயிறைத்தண்ணீர்வேம்புக்கேதான், சேட்டுக்கேசொரிபசுந் தேன்பரத்தைமார்க்குச் செய்தநன்றியவ்வாறும் செப்பலாகும்' மாட்டுக்கேயேறிவரு மெம்பிரானை, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௰௪

முன்னொருவன்வாயிற் றம்பலத்தைவாங்கி, மூசியாமற்றங்களிட வாயிற்கொண்டு, பின்னொருவன் வந்தவுடனவன் வாய்த்தன்னில, பேதமரவுமிழந்துநலம் பே

சிப்பின்னும், தன்னினங்கள்கெட்டவர்க்கு மிந்தச்சே தி, தாராதபரத்தையரைத்தழுவலாமோ, மன்னுகின்ற நஞ்சுறையுங்கண்டத்தானை,மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௰௫)

நெருப்பிலேகுளிர்ந்த குணங்காணலாகும், நீர்ப்பெ ருக்கினீர் தாபனிற்கலாகும் பொருப்பிலேசெழிந் தகலை லம்வெடிக்கலாகும், பொருந்தாதவிஷங்கடனைப் பொரு த்தலாகும், கருப்பவாய்மதுரமொழிப் பரத்தையார்க ங், கபடத்ததையெவராலும் கடக்கலாமோ, மறுப்புறு வாரணமுரிந்துநின்றதேவை, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௰௬)

கூத்தியர்கள்கபடத்தை யறியவென்றால், கொஞ்சம ல்லதங்கனுக்குக் கூடாதென்றே, நீத்தசிவன்மழுவெடு த்தான்றிருமால்பண்டு, செய்யிலேகைவிட்டா னிறைந் தவேதன், எத்தறியசத்தியத்தேகத்தேசேர்ந்தான், எப் படிநீ ரிளைஞோராயிவரைச்சேர்ந்தீர், வாய்த்ததனிவே சியரைவிட்டுநீங்கி, மறைக்காட்டிலம்மானை வணங்கு வீரோ. (௰௭)

தெருவிலேபுறப்படுவார் மூலையைச்சற்றே, திரப்பா ர்மெதமெதனநடப்பார் திரும்பிப்பார்ப்பார், உருவிலே யிளைஞோரைப் பரிப்பாராசை, யுள்ளவர்போன்மயங் குவாருடனமேல்வீழ்ந்து, சருவுவாரழைத்துக்கொண டுள்ளேபோவார், தாம்பொருந்தும்பணயிலைக்குத்தக் கதாக, மருவுவார்பரத்தையரைவிட்டுநீங்கி மறைக்கா ட்டிலம் மானை வணங்குவீரோ. (௰அ)

பிணங்கண்டாற்கழுகோடிச்சுற்றிக்கொள்ளும்,பிணி
கண்டால்வயிற்றியனூர்பேசுமங்கே.நிணங்கண்டால்கா
கநாய்பிடுங்கித்தின்னு,நீர்கண்டால்முதலைவந்து நெரு
ங்கிக்கொள்ளும்,பணங்கண்டால்விலைமாதராசைநெஞ்
சம்,பாவிப்பாரவளைமுகம்பார்க்கலாமோ, மணங்கண்
டான்மதுவருந்தும-வண்டுபோல, மறைக்சாட்டிலம்
மானை வணங்குவீரோ. ௰௯

காலுக்குக்காலாழிபெங்கேகைக்குக்,கடகமெங்கேச
வுளியெங்கே கடுக்கனெங்கே, பாலுக்குப்பசுவெங்கே
பெருமையெங்கே,பண்ணைக்குமாடெங்கேபவளமெங்
கே, மேலுக்குமஞ்சளெங்கேயென்றுதெட்டி, மெள்ள
மெள்ளப்பறிக்குமந்த வேசிமாரை, மாலுக்குத்துணை
யென்றுநம்பவேண்டாம்,மறைக்காட்டிலம்மானைவண
ங்குவீரோ. ௨௰

வேசியர்க்குநெஞ்சிரக்கஞ்சற்றுமில்லை, வேசியர்க்கு
ச்சாதிகுலந்தானுமில்லை, வேசியர்க்குச்செய்நன்றிய
றிவதில்லை, வேசியர்க்குப்பொய்யல்லானமெய்யொன்
றில்லை,வேசியர்க்குநிறைபொறுமைகுணமில்லை, வேசி
யர்க்குவிதரணமேமிகுதியில்லை, வேசியர்க்குப்பணங்
கொடுத்துவிரும்பவேண்டாம், விமலாமறைக்காடர்ப
தம்விரும்புவீரோ, (௧௨)

ஆடிக்குச்சேலையைந்துவாங்கவேண்டும், ஆடியன்றி
கோழிகருவாடுவேண்டும, வேடிக்கைமூச்குத்தி சவுரி
வேண்டும்,மீன்காடைகவுதாரிநாரைவேண்டுஞ்,சாடிக்

குச்சாராயம்நிறைக்கவேண்டும், தாருமென்றுபணம்ப
றிக்குஞ்சமர்த்தியான,வாடிக்கைத்தாயக்கிழவிமயலைநீ
ங்கிமறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௨௨)

வேண்டியபொன் முன்கொடுத்துத்திரிந்தபேர்கள்,
மிடிவந்தாற்றங்களிடவீட்டின்வாசல், ஆண்டியெனவு
ருமாறித்தனிவந்தாலும், அதுக்கேற்றபேர்களைக்கொ
ண்டடித்துத்தள்ளி, தீண்டுகினும்பாவமெனவுரைப்பா
ர்வேசித, மதரிவையர்கடெருவினிலும் செல்லலாமோ
மாண்டவொருமாபெலிக்கேயுலகமீந்த, மறைக்காட்டி
லம்மானைவணங்குவீரே. (௨௩)

இந்திரனேயானாலும்கொடுப்பதொன்று, மில்லையெ
ன்றாலவனைவெறுதநீனரென்பார், கொந்துலகிற்புலைய
ர்தாமெவரென்றாலுங், கொடுப்பவரேதங்கள்குலதெய்
வமென்பார்,சுந்தரமாய்கையிலுள்ளபொருளையெல்லா
ஞ். சுத்தவட்டைபோலிருந்துசுத்திக்கொள்வார், மந்தி
ரமுந்தந்திரமுமருந்துமான, மறைக்காட்டிலம்மானைவ
ணங்குவீரே. (௨௪)

வீட்டிலேவலியவந்து நயக்கள்பேசி, விழிகாட்டிமு
லைகாட்டிவிகாரம்பூட்டி, கோட்டிலே சிறந்தமறப் பா
வைப்போலே, குதித்துநிதியுள்ளதெல்லாங் கொள்ளை
கொண்டு, நாட்டிலேல்போய்பிழையுமென்றுசொல்லி,ந
ழுவிப்போம் பரத்தையரை நம்பவேண்டாம், மாட்டி
லேயேறிவருமெம்பிரானை, மறைக்காட்டிலம்மானைவ
ணங்குவீரே. (௨௫)

நாடிவருமிரவலர்க்குமொன்றுசெய்யார், நல்லோர்க்குமொருகாசுநல்கமாட்டார், பாடுபடுநதாயாற்குந்தகப்பனார்க்கும். பணமொன்றுங் கொடுத்தறியார் பரத்தைமார்க்குக், தேடியிடும்பிளைகளாய்த்திரிவார்பினனுந் திரிந்துதிரிந்தென்னபலன்சேரக்கண்டார், வாடியிடும்பரத்தையனை விட்டுநீங்கி, மறைககாட்டிலம்மானை வணங்குவீரோ. (உசு)

பாவவினைக்கொடுமையினாற் பரத்தைமார்க்குப், பலகாலுங்கொடுத்தழிக்கும்பணத்தையெல்லாங், கோயிலுக்குக் கொடுத்தாலும் பலனேயுண்டு, குருக்களுக்குக் கொடுத்தாலும் குறைவராது, நாவலர்க்குக்கொடுத்தாலும் நீதியுண்டு, நல்லோர்க்குக்கொடுத்தாலும் பலனேயுண்டு, வாவிவாழ்பரத்தையனைவிட்டுநீங்கி, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. (உஎ)

மூக்கிலேபித்தளைமூக் குத்திகண்டீர், முலையிலேபலபேருங்கிள்ளைக்கண்டீர், பாக்கிலேபாஷாணங்கலப்பார்கண்டீர், பாயிலேபலபேரும் படுப்பார்கண்டீர், நாக்கிலேசாராயநாற்றங்கண்டீர், நாடோறும்பணம்மறிக்கு நயமுங்கண்டீர், வாக்கிலும் பரத்தையனைவிட்டு நீங்கி, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. (உஅ)

ஒருத்தியெனக்கெதிரான வீட்டுக்காரி, ஒருமரத்தைக்கெழுபதுபொன்னாடைமநூறு.பருர்தூருந்திலதவன்னச்சேலைபத்தும், படிநூற்றுக்கலநெல்லும்பற்றினாள்காண், திருத்தியதிலேபாதி மாதமாதம் சிக்காமற்றாரு

மென்றுதட்டிவாங்கி, வருத்துகின்றபரத்தையரைவிட்டுநீக்கி, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ (௯)

எட்டியிலேகட்டுமாம் பழமுண்டாமோ, இலவிலே இனியபலாச் சுளையுண்டாமோ, நெட்டியிலேநற்கருப்பஞ்சாறுண்டாமோ, நெருப்பிலேகுளிர்ந்தபனிநீருண்டாமோ, கொட்டியிலேசெங்கழு நீர்ப்பூவுண்டாமோ, கோதையர்களிடத்திநல்லகுணமுண்டாமோ, மட்டளந்தபரத்தையரைவிட்டுநீங்கி, மறைக்கட்டிலம்மானைவணங்குவீரோ. (௰)

முலைகாட்டி முலைப்பிள்ளைத்தகுறியுங்காட்டி, முகங்காட்டிவிளக்கியபன்முழுதுங்காட்டிக், கொலைகாட்டிநெடுங்கடைக்கண்சற்றேகாட்டி, கொஞ்சுகிளி மொழிகாட்டிக்கூறியல்குல வினைகாட்டித்தெருத்தோறுந்திரியுமந்தவேசியரைக்கூடமனம விரும்பலாமோ. மலைகாட்டுமுலைப்பரத்தைமாரைநீங்கி, மறைக்காட்டி லம்மானை வணங்குவீரோ. (௰௧)

சேலையென்பார பணமென்பார்சிந்தாக்கென்பார், திருநாளிற்செலவெல்லாஞ் செய்யுமென்பார் ஓலையென்பார்பறித்துக் கொண்டுள்ளேபோவார், ஓங்கியதாய்க்கிழவிசற்றேமுட்டாளென்றும். பாலையுநீரையும்பிரிக்குமன்னம்போலப், பகுந்துண்ணும்பரத்தையரைப்பரவலாமோ, மாலயனும்போற்றுகின்றகண்டத்தனை, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. (௰௨)

ஒருவனைமுன்மடியின்மேலுறங்கப்பண்ணி,ஒருவனுக்குசெங்கனிவாயூறற்றேக்கி, ஒருவனையப்பாலிருத்தியுறவுபேசி,ஒருவனுக்குமுலைகாட்டி மயலைப்பூட்டி, வருமினனோராயிரம்பேரொருகாலத்தில்,வந்தாலுமாயமிடும்பாத்தைமாரை,மருவுசுகபோகத்தைமறந்துநீங்கிம,றைக்காட்டிலம்மானைவணங்குவீரோ, (௩௩)

சிலபேரைமெத்தையின்மே லிருத்திக்கொண்டு,சிலபேரைமுற்றத்தேசெலவிட்டுச் சிலபேராத்தெருவாசற்புறம்பேவிட்டுச், சிலபேரைத்தெருத்தோறுந்திரியவிட்டு, மலிவாசற்காரர்தம்மைக்காய்ச்சலோடு வளவிலேகிடந்துழலவருத்திமாய, வலைவீசும்வேசியரைமறந்துநீங்கிமறைக்காட்டிலம்மானைவணங்குமோ, (௩௪)

ஊர்க்குநீர்போனநாண்முதலாவேறிங், கொருவருடன்பேச்சுமிலலையுறக்கமிலலை, ஆர்க்குநானிதையுரைப்பேன்பெற்றதாயும்,அடுத்தவருமபகையாகவாசைகொண்டேன்,தீர்க்குமருந்தறியீரோவெனறுநயப்பித்,தெட்டுவார்பணம்பறிப்பார்திருட்டுவேசி,மார்க்குநீமனமுருகிமயக்கத்தண்டாம், மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ, (௩௫)

பாத்தையரோடிணங்கினுற்பாவமேலாம்,பாலோகங்கிடையாதுபணமும்பாழாம், இரப்பதிலுண்டாம்உரத்

திடும்பாஷாணத்தாற்கழுவனெய்பால்,உப்பிருந்தபாண்டம்போலுளுத்துப்போகும், மரத்தியெனும்பரதனதைய ராவிட்டுநீங்கி,மறைக்காட்டிலம்பனைவணங்குவீரோ ()

மாமியார்பிடித்தவராத்தெருவிலோட்டும்,மாமியாருள்ளவராயுள்ளேவைக்கும், மாமியார்கொடுப்பவரைக் குருவாய்க்காணும், மாமியார்கொடாதவரைப்புலிபோற்பாயும், மாமியாரொண்ணேரமலட்டிக்கொல்லும்,மாமியார்பரத்தையர்க்குத்தாயாரான-மாமியார்மாயவலைக்குள்ளாகாமல, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. () பச்சைப்பாம்புலர்த்தியதின்சமஞ்சடொக்கப் பசுமஞ்சள்கழுகிருந்தபச்சையோந்தி, எச்சத்தைவாங்கிநன்றாயுலர்த்திக்கொண்டே, இவையெல்லாம்பொடிபண்ணியெடுத்துக்கொண்டு, கச்சுப்பூண்மூலைதனிமேலகீழ்மேற்பூசிக், கன்மமெல்லாந்தங்களிடகைக்குள்ளாக,வைச்சுப்போகெனும்பாத்தைமாராநீங்கி, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ. (௩அ)

நாய்த்தலையின்மூளைகுழிநரிப்பிச்சுச்செர்,நாய்ப்பாலுங்குரங்கிரல்நாலுங்கூட்டித்,தோய்த்தகழுதைப்பாலிலுராத்துச்சங்கின்,சுண்ணம்பினிற்மலந்தேயுண்டைசேர்த்துக், கார்த்தநறுஞ்சாதிக்கா யேலபச்சைக், கர்ப்பூரப்

பொடியின் மணங்கட்டிவைத்து, வாய்த்தமருந்திடும் பரத்தைமாரைநீங்கி, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௩௯)

நாய்க்கடுகு சிறுபூளைசிவனார்வேம்பு, நல்லெண்ணய் விளக்கெண்ணெய் நாவற்பட்டை, பேய்க்கழுதைமுது கிணங்கழுவின்காலின், பெருவிரலினகஞ்செத்தபிண த்திநூற்றை, தாய்க்கிழவிசெவிக்குறும்பி யிவைகளெ ல்லாம், சங்கினிடச்சுண்ணும்பு தன்னிற்கூட்டி, வாய் க்கமருந்திடும் பாத்தைமாரைநீங்கி, மறைக்காட்டிலம் மானை வணங்குவீரே. (௪௰)

தாய்க்கிழவி யெனக்கிடக்கும்பரத்தைமார்க்குப், ப ணம்பறிக்கும்புத்திசொல்லும் பாவியான,தாய்க்கிழவி பொய்யல்லாமெய்யதாகச், சாதிக்குங் கிழவிமயல்தா னுண்டாகும், பேய்க்கிழவிமூதேவிவடிவமான, பிண க்கிழவிநாய்போலப் பிடுங்கித்தின்னும்,வாய்க்கிழவிமா யவலைக்குள்ளாகாமல், மறைக்காட்டிலம்மானை வணங் குவீரே (௪௧)

கடைக்கிழவிதன்வீட்டில் வந்தபேரைக், கடையாக் குங்கிழவிமுட்டைக் கழுதைபோல, நடைக்கிழவிமா யமயற்கிழவிபொல்லா. ஊைக்கிழவியிளைஞோர்கருமம ன்போல்வந்த, கிடைக்கிழவிதான்கற்ற வினையால்வெ

ந்து, கெடுங்கிழவி பரத்தையர்க்குத்தாயாரான, மடை-க்கிழவிமாயவலைக்குள்ளாகாமல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சஉ)

கொலைக்கிழவிமருந்தாலு மிளைஞோர்தங்கள், குடிகெடுக்குங் கிழவிநரைக்கோலமான, தலைககிழவிபேராசைககிழவிநல்ல சாராயந்தனக்குமகள் தனைவிற்கும்புலைக்கிழவிகுணங்கெட்டகிழவிமண்ணைப், போங்கிழவிபரத்தையர்தாய்கிழவி மாயமட்ற்குள்ளாகாமல்,மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சந)

சினக்கிழவிகண்கெட்டகிழவியேசும், திடக்கிழவிவிளைஞோரைத்திருடராக்கும், வினைக்கிழவிபாசாங்குகிழவிமெத்த, வினைக்கிழவி வீம்புபேசும, கார்க்கிழவிகொடுங்கிழவி பணத்தையெல்லாம், கைப்பறிக்குங்கிழவிவிலைமாதர்தங்கள்,வனைக்கிழவிதோதகற்றுக்குள்ளாகாமல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சச)

பாவலர்க்கேகொடுத்தறியர் வேதமோதும், பார்ப்பார்க்குங் கொடுத்தறியார் பங்காய்நின்ற, நாவலர்க்குங்கொடுத்தறியாரிரவலர்க்கும், நல்லோர்க்குங்கொடுத்தறியார் நலஞ்சேர்கோயில், தேவர்க்குங்கொடுத்தறியார்தெரிவைமார்க்குத், தேடியளித்திடுமெந்தச் சோதிவிட்டே, மாவலரிபூவுஞ்சூடுகின்ற, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே. (சரு)

குரங்காசனத்தையொக்கும் நிதம்பத்தார்கள், கோட்டாலைக்காரியர்கள்கொடுத்தபேர்க்கும், இரங்காதநெஞ்சியர்கள்படிக்கவாயல் எவரிடத்துமாசை சற்றுமில்லாதார்கள், பரங்காணுமென்றவரைக்கெடுக்கும்பாவப்பரத்தையருக்கிரங்காமற் பலரும்போற்றும், வரங்காணுமாதுமையாள் பாகத்தானை, மறைக்காட்டிலம்மானைவணங்குவீரே. (௬௬)

நாய்பிடுங்கு முலைபைநல்ல கிரிபோலென்றும், நரிபிடுங்குமிடைசிங்க விடைபோலென்றும, சீழ்பிடிக்குமூக்கை செண்பகம்போலென்றும், சிரைப்புண்ணும்செம்மயிர்க்கார்மேகமென்றும், பீறிதிக்குங்காலையத்திக்கனிபோலென்றும், பித்தேறியிப்படியேயதிசற்றிக்கொண்டு, மாய்ந்துதிரிந்தோருக்கீடாகாமல் மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௭)

அரைப்பணத்தைக் காட்டிமுழுப் பணத்தைவாங்கி அனியாயம்பண்ணுகின்றவரிவைமார்கள், உரைப்புடையசோற்றுக்குள்ளாக் கனமுங்கெட்டுக்கையிலுள்ளபொருள்களெல்லாமகழ்ந்தபின்னர், இரைப்புடனேபலநோய்கொண்டிளமைதன்னில், எடழிந்துதிரிந்துவரும் வீதிநீங்கி, வரைப்பலவிலாசகிரி மேவுகின்ற மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௮)

வேசியுடனேதிரிந்து வீணாள்போக்கும், வீம்பர்கள் தம்வினையைத்தாணமனூர்தூதர் வீசியிழுத்தேயிருகைக்

ட்டிக்கொண்டு, வெய்யவழன்மார்க்கத் தேமென்னச் சென்றங், கூசிகள்கண்ணுத்தணறி லுருவவெற்றிஉழல் விம்பாராளைகயிறுமொலொழிந்துநீங்கி, மாசிலாவெள்ளைவிடைதன்னிமேலேறும், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. (௪௯)

நரம்புடனே யெலும்புதிரந்தோலுங்கூடி, நான்முழத்தே ஒனபதுபிற்றலுமேயான, குரம்பைய மடவார்களொருயிற்றலுக்கே கொடுத்துவெகு சொர்ணமெல்லாம் குடிதான்கெட்டு, நிரம்புமதிகெட்டவரேயினியென்றலும் நேசமுடன்பரகுரவனறன்னைப்போற்றி, வரம்புநெறிதனிநடந்துவிடைமீதேறும் மறைக்காட்டி. ()

ஆசையென்று லுன்பேரிற் கொண்டேனென்பாள் அழகானபெண்ணலவோ நானுமெனபாள், நேசமுடனினைக்குமாய்நடங்கள்பேசி, நீர்வந்தால்நான்செய்த தவமாமெனபாள், காசுபணந்தரவேணடாம்வாருமென்பாள் கைக்குளகப்பட்டபின்பு மறிந்துப்பொல்லா, வாசகமுஞ்சொலலுவாளவளைநீங்கி மறைக். (௫௧)

அங்காடிச்சுணைககாய்போ முலையினார்கள் அணைவருங்கொப்பளித்து பிழும்படிகவாயார், சங்காகும்வெண்மையெனவடித்துத்தாசைச், தப்புகின்றபாளைபோலல்குலார்கள் அங்காலுமோரிடத்துமாசையில்லா அரிவைபொதுமாதர்க்கடஞ் சுகத்தைநீங்கி, மங்கார்தவெள்ளைவிடைதன்னிலேறும்- மறைக். (௫௨)

பணந்தானேகுலங்கல்விப் பரத்தைமார்க்குப் பண ந்தானே யழகிளமை பரத்தைமார்க்குப, பணந்தானே குணமுழுதும் பரத்தைமார்க்குப்பணந்தானேசுகபே கம் பரத்தைமார்க்குப், பணந்தானேபலங்காம் பரத் தைமார்க்குப் பணந்தானேபஞ்சமெத்தை பரத்தைமா ர்க்குப் பயின்மறைக்காட்டீசர்பதம் பணிந்திடீரே. ()

பரத்தையரேயறியாமற் பறிக்கும்வேடர், பரத்தைய ரே குடிகெடுக்கும் பகைவராவர், பரத்தையரேதழுவ ணையிற்பங்குங்கொள்வார் பரத்தையரே பரக்கொடும்பா ஷாணமீவார், பரத்தையரேபஞ்சபாதகமுஞ்செய்வார் பரத்தையரே புறம்பேசும் பழியும்பாரார், பரத்தைய ரோடிணக்கமுற்ற பாவம்போகப் பயின்மறைக்காட்டீ சர்பதம் பணிந்திடீரே. (௫௪)

பாராயமாய் மஞ்சள்வாடைபூசி, பலநாளும்பொய் சொல்லிப் பணத்தைகையெல்லாஞ், சாராயந்தனக்குவிலை யாகநல்கிச் சாலவுந்தான்கொடுத்தளவாய் தயங்கிவாங் கிப் பேராசையுடன்விடுத்து வீதிதோறும் பித்தடைந் து திரிபரத்தைபோகத்தின்பம் வாராததுன்பம்வருமவ ஸை நீங்கி மறைக். (௫௫)

பணத்தினால்வசமாக்கப் படுவதல்லாற், பாவமொரு வடிவான பரத்தைமாரைக், குணத்தினால்வசமாக்கப் படுமோநல்லகுலத்தினால் வசமாக்கப்படுமோமாந்தர்; நினைப்பினால் வசமாக்கப் படுமோசற்றும் நேசத்தால் வசமாக்கப்படுமோவுத்தி, பணத்தினாலவர்போக நேச நீங்கிப் பயின்மறைக்காட்டீசர்பதம் பணிந்திடீரே. ()

பரத்தையர்தங்கபடறிந்து தம்மைத்தாமேபரிகரிக்க வேண்டுமென்றுபரிவாலன்றோ, கரத்தின்மழுவுடைய பிரான், கவுரிதன்னைக் கருதியொருபாலமைகான்கரிய மாயன், சிரத்தையுடன்மலர்மகளை மார்பிற்சேர்த்தான் தேவிதன்னைநாவிலயன் சேர்த்துவாழ்ந்தான், வரத்திலவர் மாயவலைக்குள்ளாகாமல் மறைக்காட்டி. (௫௭)

நழுவுவரென்றறிந்து பணமுள்ளபேர்க்கு நயம்பேசி யிதம்பேசி நன்மைபேசி, தொழுவார்களழுவார்களொ ப்பதாகத் தூஷ்விடுவார்களேத்தி தோழிமாரை, விழு வார்களுடன்மீதிற்சிணுங்கிச்சுற்றும்வேண்டியதுபொ ருள்பறிததுவிட்டுமெள்ள, மழுவுமந்தப்பரத்தையரை விட்டுநீங்கி மறைக். (௫௮)

நினைவதெல்லாங் குடிகெடுக்கு நினைவேபார்த்து நிற் பதெல்லாமயல்பூண்டு நெஞ்சந்தானே, புனைவதெல்லா முலைமீதிற் கிழியுங்கிள்ளும் புகல்வதெல்லாம் வஞ்சக

மும்பொய்யுஞ்சூதும், நினைவதெல்லாம்பொய்யழகைக் கண்ணீர்விட்டு, நடப்பதெல்லாம் பணம்பறிக்குநயமே கண்டீர், அணைவதெல்லாம்பித்தனையே யவரைநீங்கி,ம றைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (ருகூ)

நானிருக்கநீர்புறம்பே போகலாமோ, ஞாயமோவும் மையொத்த நாகரீகர்-தானிருக்கநான்புறம்பு போகலா மோ, தருமமோவெனவலியச்சருவிக்கூடி, ஊனிருக் கவுயிர்வாங்கும் வேசிமாரை யுறவென்றுமொருநாளு நம்பவேண்டாம்; மானிருக்குங்கையானையெம்பிரானை மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சுய)

மாமியார் பரத்தையர்க்குத் தாயாரான, மாமியார்ந டைத்ததெல்லாம் லச்சைகெட்ட, மாமியார்முகமினுக் கிமஞ்சள்பூச, மாமியாரெண்ணெய்க் குண்மயிர்போல லாங்கு, மாமியார்புலியருக்குமகளைக்கூட்டும் மாமியா ராசைக்குமருந்துகூட்டும மாமியார்மாயவலைக்குள்ளா காமல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (சுக)

பிடியென்பார்படியளந்து கொடுத்தாலமாதப், பணமெனபார்பணமுழுதுங் சொடுத்தாற்பொன்னின் கொ டியென்பார்கொடிபண்ணிக் கொடுத்தானல்ல, கொப் பென்பார்கொப்பிரண்டுங் கொடுத்தாற்கந்தப், பொடி யென்பாரிப்படியே சூறைகொண்டு, போதுமெனவொரு நாளும் புகலார்கண்டீர், மடியென்பாரபரத்தையரை விட்டுநீங்கி, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. ()

செய்யாதவிஞ்சனைகள் செய்வார்தம்மை, சேர்ந்தவர்கைப்பொருளையெல்லாஞ் சேரக்கொள்வார், பொருள் கொடுத்தாற் புலையரொடுபோகஞ்செய்வார், பொல்லாதபசத்தையவரை நம்பவேண்டாம், கையாசையன்றிவேறாசைகொள்வார் கண்ணுறும்பரத்தையரைக்காணலாமோசமைபாமாச்சுருளோதி பாகத்தானை, மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௩)

மாமியார்படித்ததெல்லாம் பழுதிமாயம், மாமியார்க்குடிப்பதெல்லாம் படிசாராயம, மாமியார்நினைப்பதெல்லாங்கபடேஞ்சுதம் மாமியார்செய்வதெல்லா மாயவித்தை, மாமியார்கெடுப்பதெல்லாம் மிளைஞோர்தம்மை மாமியாரவேசிக்குத்தாயாரான, மாமியார்தோதகத்துக்குள்ளாகாமல் மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே.

நிலத்திலேயெறிபானை நிலமேதுன்பம், நிணத்திலேவிலைமாதர் நிணமேதுன்பஞ், சலத்திலே யுப்புறைக்குஞ்சலமேதுன்பம், தருவிலேயெட்டியெனுந் தருவேதுன்பம், குலத்திலேபரத்தையர்தங் குலமேதுன்பம் கூறினேன்பரத்தையர் தங்கொள்கைநீங்கி, வலத்திலே மழுவுடையவெமபிரானை, மறைக்காட்டி லம்மானைவணங்குவீரே. (௬௫)

படும்பட்டா விலைமாதால்குற்றமேய்ந்து, படுகுழியில் விழுந்தலைந்துபணமுந்தோற்று, கடன்பட்டுமனையா

டுகன்றுவிற்றுக், கலம்விற்றுசிலம்விற்றுக்காணிவிற்றுத்-திடம்பட்டசிறுபயல்கடமைபுயவிற்றுத்-திருடராய்க்கன்னமிட்டுத் திரியவேண்டாம்-மடம்பட்டவிலை மாதர்மயலைநீங்கி-மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே.

காலனைநீரென்று கருதலாமோ-கட்டிற்கிளிஞ்சில்வெள்ளியென்று காணலாமோ-மீனெல்லாமதியென்று விளம்பலாமோ - மின்மினியேவிளக்கென்று மெலியலாமோ-ஊனெல்லா மிருகசவுயிர்வாங்கும்வேசி உறவென்னவொருநாளும் நம்பவேண்டாம்-வானெல்லாநிறைந்திருக்குமெம்பிரானை - மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௭)

ஆகமங்களிருக்க வேதியன்மேற்சற்றும் - அரைக்கணமேயானாலும் மனதில்லாமல- பாகவழி வருவானபரத்தைமாரைப்-பலகாலும்புகின்ற பாவிகாளோ-நாகவிஷமந்திரத்தாற் றிரும்பும்வேசி - நாய்மருந்து விஷம்பட்டாலெவராற்கூடும்- வாகனமாயெருதேறு மெம்பிரானை மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௮)

எலியோடிப்பொறியிலிரை யெடுக்குமாபோல் - ஈசலினமெலிவலையிலெய்துமாபோல - புலியோடிக்கற்கூண்டிற்புகுதுமாபோல் - புணலோடி மீன்றூண்டில் பிடிக்குமாபோல் - சலியாமற்பொய்பேசும பரத்தைமாரை-தழுவியே பலகாலுஞ்சனிநோய்கொண்டு-வலியெடுத்துமொருநாளுந் திரியவேண்டாம்- மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௬௯)

பாக்கிலேமருந்துயிடும் பரத்தைமாரை- பலகாலஞ் சேர்ந்திருந்து பணமுந்தோற்று - மூக்கிலேயிடிவிழுந்

துகுணகுணென்று- முழங்காலிற்குலைவந்து முடவனுகி-நாக்கிலேமருந்தூறியாவருக்கும் - நம்பாமற்பேச்சுணாக்குநாகுக்கிடாய் - வாக்கிலேபரத்தையரை யுரைத்துநீங்கி மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௭௰)

பணந்தானேபறிக்கின்ற பரத்தைமாரே - பலநாளிலுயிர்பறிக்கும் வேசிமார்கள்- குணந்தானேயிரக்கமாய் வணங்கிப்பேசும் - குணமெல்லாங் குடிகெடுக்குங்கொள்கைதானே - தினந்தானேபரத்தையரைச்சேர்ந்தான்மெத்த-தீங்குவருஞ்செய்தொழில போந்திருடராவார் வணங்காதபுரமெரித்து விடையிலேறும் மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௭௧)

சூதுவினைசதிபாவமெத்தவுண்டு- சொல்லவினிமுடியாதுபரத்தைமார்க்கு - வாதுகளுநங்கபடுகளு மயக்கச்சொல்லும்-வல்லடியுமெத்தவுண்டு பரத்தையாருக்கேது சற்றுநீதியில்லைநிலைமையில்லை-எச்சலில்லை வெட்கமில்லை பரத்தைமார்க்கு-மாதுமையாளொருபாதியெம்பிரானை - மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. ()

மெழுகோடே கோழிமுட்டை கலந்துகூட்டி-மினிக்கிமுகம்முலைக்குநல்ல மஞ்சள்பூசிக்-கழுகோடேயிருக்குமந்தப் பிணமென்றாலுங் - கையிலேபொருள்கொடுத்தாற் கலந்துபோகப - வழுவாதேசெய்யுமந்தப் பரத்தைமாரை - வருந்தியேபொருள்கொடுத்து மாயவேண்டாம்-மழுவேந்துங்கைபானை யெம்பிரானை மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. (௭௩)

தேவடியா ளொருத்தியவளனேகம்பேர்க்குத் தினந் தினமும்பெண்டெனவேசேர்ந்துகூடி-நாவடியிலிருக்கு மந்தவுதட்டிலேதா-நல்லமிர்தமிருக்குமென்றுநாய்போ லப்பற்றிச் - சோகைவடிவாகியே பிணிநோய்கொண்டு-தொலலுலகிற்றுரோஷிகளாய்த் திரியவேண்டாம்-மாவடியிலிருக்குமந்தவெம் பிரானை-மறைக்காட்டிலம் மானை வணங்குவீரோ எசு

மோரிருக்கச்சாராயந்தேடிவாழை-முதலிருக்கவெட்டியினீர் மொண்டுவார்த்ததும்-ஊரிருக்கப்பறைச்சேரி தேடிநல்ல- உடைக்காடையிருக்குமறவுரியைப்போர்த்துச்-சீரிருக்கு மனைபாட்டியிருக்கமாயத்-தெரிவையர்க்குத்தேடிநொந்து திகைக்கவேண்டா - மாரிருக்குந்திருமாலுமயனுங்காணு மறைக்காட்டிலம்மானே. எரு

கழுகோடிப்பார்க்கும் ரத்தநீரிலேதான்-களையாறவேண்டுமென்றுகருதுமாபோல்-அழல்போலநின்றெறியுங்கானலுக்குள் - அள்ளிநீர்குடித்தழலை யடக்குமாபோல்-விழவானபேச்சுடையவேசிபாசை- மெய்யென்றுநம்பினீர்மெலியவேண்டாம் - மழுவொருகைமானொருகைவைத்துள்ளானை மறைக்காட்டிலம்மானை. ()

கற்றதெல்லாம் பொய்சூதுகபடுதானே- கள்ளமயல் பொருந்திநிற்குங்கபடிகட்கே - யெத்தனைதானுபகாரம் பண்ணினாலும்-எப்போதுமனதுதய விலலாதார்கண்-செத்தபிணமானாலும் பொருளைகண்டால்-சிக்கெனவே

தழுவுமெள்ளச்செய்வார்போக- மத்தகஜமுகத்தானைய ளித்துளானை-மறைக்காட்டிலம்மானைவணங்குவீரோ ()

கடிதானவிஷம்பாம்புகடித்தாலப்போ-கடுகிபேம ந்திரத்தாற்கழிக்கலாகும்-கொடிதானதுர்ச்சனர்தம் வி ஷமொன்றாலும்-கொஞ்சமதாமப் பிறப்புக்குள்ளே தீ ரும்- இடுவாயில் பரத்தையர்தம் விஷமேமென்றால்-எ ழுபிறப்புமீளாதங்கவளைநீங்கி-வடுவானகன்னிபிடபா கத்தானை-மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. எஅ

கோடிசெம்பொன் கொடுத்தாலுமானைசேனை, கு திரைகளைக்கொடுத்தாலுங் குறைவேயென்று,வேடர்ப றிபோற்பறிக்கும் வேசியாசை, மெய்யென்று நம்பியே மெலிந்துசேர்ந்து, தேடியளித்தே நிதிகளெல்லாந்தோ ற்றுத்திருடராய்ப்புவிமீதிற்றிகைத்துமெத்த,வாடிமுக ஞ்சேர்ந்துமயங்கவேண்டாம், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரோ. எகூ

கொண்டாடியேல்விழுந்து நயங்கள்பேசிக், கூசா மல்சேர்ந்துநிதிக்கொடுவாவென்று, திண்டாடத்தெரு வாசல்முன்னேவிட்டுத், திருடனென்றுகல்முதுகிற்சு மக்கவைத்துப், பெண்டாட்டி யில்லையென்று பெற்றதா யைப், பிள்ளைகளையில்லென்றுபெருநப்பேசி, வண்டா ட்டம்பேசுபரத்தையவளைநீங்கிமறைக்காட்டிலம்மானை.

கண்டாரைவரவழைத்துக்கொண்டுபட்டுசென்று, க ட்டின்மெத்தைமீதில்வைத்துக்கண்ணைகாட்டிப், பண்

டொருநாள்வந் திரொன்றிரவதாகப்பசப்பியேபாஷாண வுண்டைபாய்ச்சி, உண்டானபொருளையெல்லாங்கைக் குட்பற்றி.உபாயத்தாற்றுரங்காக்கி யோட்டுவார்காண், வண்டாருங்குழலுமையாள் பாகத்தானைமறைக்காட்டி லம்மானைவணங்குவீரோ. அக

உடனுகக்கட்டவிதியுள்ளபோதில் உனைப்பிரிந்தா லியானசாவேனுண்மையென்பாள், இடும்போதுசோற் றிலேதானுங்கூடி இருந்துண்டாலொழியவெனக் கிரங் காதென்பாள், கொடுபொருளுநமாணடகிற் பின்போ வெனறு, குட்டுவான்நாய்போலே குலைப்பாளஞ்ச, மட வார்கள் மாயையினிவிட்டுநீங்கி, மறைக்காட்டிலம்மா னை வணங்குவீரோ. அஉ

சாதிகுலமுறையில்லைதயவேயில்லை, சதிபாவஞ்ச ற்பனைகள்சாலவுண்டு,|நீதியிலலைகுற்றமில்லைநினைக்கும் போது,நினைவெல்லாங்குடிகெடுக்கும் நினைவேகண்டீர் பாதியுலகளித்தாலு மெனனதந்தீர், பத்தாதெனறேயு ரைக்கும் பரத்தைமார்கள, வாதனையிற்பிரிந்துழன்று மயங்கவேண்டாம், மறைக்காட்டிலம் மானைவணங்கு வீரே. அங

பேச்சென்றாலமிர்தம்போற்பேசுவார்கள்,பேயம டவாராசைகொண்டாற்பொருள்களெல்லா,ஆச்சென் றாலகத்தினைவிட்டப்பாலோடி, அதற்கேற்றபேர்களைக் கொண்டடித்துத்தள்ளிப், பூச்செண்டாலெறியுமந்தக் கைகளாலே-பெருங்கல்லைவிட்டெறிவார் பொதுவின்

மாதர், மாச்சிறந்தபுகழுடையவெமபிரானை, மறைக்கா ட்டிலம்மானைவணங்குவீரே. அசு

சிங்காரமாக முகமினிக்கிநல்ல திலதமிட்டுக்காமு கரைத்தேடிமெள்ள, பொங்காரமாயழகுமுடல்மேல்வீ ழ்ந்தும், பிறிந்திருப்பதில்லையென்பார் பிழையேயெ ன்பார்,'எங்காகிற்போகுமஃது தகுமோவென்பார்,இப்ப டியேபொருள்பறிப்பாரிணக்கம்நீங்கி, மங்காதவாழ்வ ளிக்குமெம்பிரானை மறைக்காட்டிலம்மானை. அரு

ஈயாமல்தேன்போலப்பொருளைச்சேர்த்தே,எவர்வந் துகேட்டாலுமில்லையென்று, தாயாரைக்குருவாகப்புத் திகேட்கும், சாராயவாச்சியர்க்குத்தானேயீந்து,பேயா ரவடிவாகிப்பித்தனாகி-பெண்டீர்க்கும் பெற்றவர்க்கும் பேதனாகி-மாபாமல்விலைமாதர்மயலைநீங்கி-மறைக்காட் லம்மானைவணங்குவீரே. அசு

எதுக்கேயிருவருமாய்கூடிவாழ, என்பாக்கியமோம லரோவெனழுதுவாரே, பாதகமோசெய்திருக்கும்பாவி யேற்கும், பலன்வந்துவாய்த்ததென்று பசப்புமாயக், கோதையருக்கிணங்கே குணந்தான்கெட்டு, கோல்குடு வைவசையேர்திககொடுநோய்கொண்டு, வாதமிதுவென் றொருக்கால் தூங்கிடாமல், மறைக்காட்டிலம்மானைவ ணங்குவீரே. அஎ

சாலவெகுபொருளுடையார் வீட்டில்வந்தால், தனி த்துவந்ததேதுசற்றுத்தயவுதனே, மாலவனுந்தயோதா

ளுங்கூடித்தேடி, வகுத்தபடிவந்திரோமதன் போலென்று, காலவிடமடவார்சொல்கருதிச்சேர்ந்து, கைப்பொருளுந்தோற்முலகிறகள்ளனுகி, வாலவயதிழந்துமதிமயங்கிடாமல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே.()

வேஙிபர்கள்குருமார்கள்வீட்டில்வந்தால், வீணர்கள் வந்தார்களென்றுவெகுண்டுபேசி, ஞாதியர்கள்நாடிவந்தாலநமன்போலவந்தானென்று நழுவியோடி வீதியிலே விலைமாதரகத்திற்சென்று, வேண்டியதோர் பொருள் கொடுத்துவீணாகி, வாதனையுமபல்நோயுங் கொண்டிடாமல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. அகூ

இப்பிறப்பெல்லாந்தேடியிருந்திந்திநாள, யென்மனதுக்கேற்றவர்நீரின்றுவாநதீர், எப்பிறப்பிற்காண்பதுமைப்பிரிந்தாலன்றே, யிலவிசிடுமருந்தாலிரக்கமாகக், கைப்பொருளெல்லாம் பறித்துக்கடக்கவோட்டும்,கள்ளமயல்மடவார்சொல் கருதிடாமல்,வைப்பதுவேமுடிமீதிலமதியினுனை, மறைக்காட்டிலம்மானை. கூய

பார்த்தாலும்பசுப்போலவிருப்பார்சற்றே, பாய்ந்தாலும்பெருபுலிகள்போலேபாய்வார், கூத்தாடியபிநயமுங்காட்டிக்கொங்கைக், குடங்காட்டிப்பொருள்பறிக்கும் பரத்தைமார்கள், நீர்த்தாரைகஇச்சைகொண்டுதிரிந்தெந்நாளும், நினைவழிந்துமதிமயங்கிநிலமைமாறி, மாற்றுனுக் கிருத்தகுடியா யிராமல், மறைக்காடிட் லம்மானை. கூக

இல்லாளுங்குலைபத்தாய்தந்தைமாரு, மெல்லோரு ங்குவலயததிலின்பமாகக்,கொல்லாமல்மருந்தையிட்டு ப்பொருளைவாங்குங், கோதையர்கள்சொற்கேட்டுக்கு டிதான்கெட்டுப்,பொல்லாரென்றுடம்பெடுத்துப்பொ ருளுந்தோற்றுப், பெருமரத்திலுளுப்பிடித்துப்பெலம் போகும்போல், வலலாண்மைகுலத்திமதிமயங்கிடாம ல், மறைக்காட்டிலம்மானை வணங்குவீரே. ௩௨

சுத்தவிஷமடவாளைச்சேர்ந்துவாழ்ந்து, சோகைவடி வாகிமெத்தநுருப்பனுகி, பெற்றவர்க்குப்பகையாகிப் பிறந்தபேர்க்கும், பெரும்பழியாய்ப்பழயபொருள்போ த்துபேர்த்திட், டித்தனையும்படுவதலலால்நாருக்கீடா- மெப்பேர்தும்பரத்தையரோடிணங்கிடாமல், மத்தகத் தையுரித்துமேற்போர்த்துளானை-மறைக்காட்டி. ( )

வெற்றிளைப்பாய்த்திரிந்துழன்று வெகுனாள்வீணாய் வேசியர்தமருந்தாலே மிகப்பேய்கொண்டு, மூற்றதமேத வந்து நின்றாலாரலேறி, முகம்பார்த்துப்புலர்ந்துபெரு மூச்சுவிட்டுச், சித்தத்தேநினைந்துருகி மயங்கிவாடித், தெரிவையர்களகேபொருள்கொடுத்துத் திகைக்கவேண் டாம், வைத்தசடைமீதில்நதிமதியினானை, மறைக்காட் டிலம்மானைவணங்குவீரே ௩௪

பறிக்கும்வகையிளைஞோரைப் பரத்தைமார்கள், பச் சிலைப்புழுவரிக்கும் பண்புபோலக், கறிக்கட்குமிள குமிலலைபுளியுமில்லை நைக்குமொரு காசுமில்லைக்கட

னுந்தாரா,சிறிக்குகட்குப்புடவையில்லையென்றுமெள்ள த்தட்டி வெகுபொருள்பறிக்குந் தெரிவைமாரை மறுத் துலகெலாமபோற்றுமெம்பிரானை, மறைக். ௲௫

தட்டிவெகுபொருள்பறிக்குந்தெரிவைமாரைச்செரு க்குடனேசேர்ந்திந்தசிலநாள்தன்னில் ஒட்டியப்புண்பு ரமியங்கபாலசூலை யுஷ்ணமும்பலவாயுமொன்றிக்கொ ண்டுகெட்டுமிகவுடல்தளர்ந்துயிரைப்பறுங்கி கெடுநர குக்கிடாகக்கிடந்திடாமல், மட்டுடனல்விலைமாதர்மய லைநீங்கிமறைக்காடிடிலம்மானைவணங்குவீரோ. ()

சத்தியம்போய் கொலைகளவுக்கஞ்சிற்சறறுஞ்சலியா தபரத்தையரைச்சருவிச்சார்ந்தார்,எத்திசையம்பரந்து ழன்றுநரகுக்கிடா எல்லார்க்கும்பொல்லராயிருந்துவா ழ்வார், பதியுடன்சிவனருள்சேர்பெரியோர்குற்றமப தமலரைத்தினநினைந்தாற்பாகதிக்கே, வைத்திடுவார்வி லைமாதர்மயலைநீங்கி மறைக்காட்டிலம்மானை ௬௭

முனமொருநாள்நீர்வந்துபோனநாளாய் மூடிகோதி யெண்ணெயிடாள் முகமுஞ்சேர்ந்தாள், பின்னொருவர் வந்தாலுந்திரும்பிப்பாராள், பேசாமலிருக்கின்றாள்பி ணக்குங்காணேன், என்னமயலுன்மீதிற் கொண்டா ளென்றே, இப்படிபொய் சொலுங்கிழவிக்கீடாகாமல், மன்னவருமலரோனுமாலும்போற்றும்-மறைக்காட்டி லம்மானைவணங்குவீரே. ௬௮

கையதனிற்பொருள்மிகவேதந்தபேர்கள், கழித்துவி ட்டுப்போகும் வகைகண்டால்மெத்த, பொய்யழுகைய ழுதுசற்றேயுடல்மேல்வீழ்ந்து, பொன்னுசைகொண் டவர்போற் புலம்பிநைந்து, செய்தகுற்றமேதுமக்குச் சொல்வீரெனனுந், தெரிவையரைச்சேர்ந்தவரோதிரு டராகி, வையகத்துளீனராய மயங்கவேண்டாம்,மறை

பெற்றதாய்கழுத்தணிந்தநகையானாலும்-பெண்டாட் டிதனக்கிட்டநகையானாலும்,உற்றதவத்தொருகுழந்தை பணியானாலும்,உடுத்திவைத்தபழம்புடவையேயானாலும், தெற்றெனவே கவர்ந்துபோய்பரத்தைக்கீந்து, சி கெனத்தாயதந்தையரைத தெருவேகண்டால், வற்றன் மறம்போனின்றுமயங்கிடாமல், மறைக்காட்டி. ௱

பகர்பழம்புண்ணுளிபரிகாரியென்னும், பந்தமொழி பரத்தையராசையினுற்கண்ட, சுகம்போதுமென்றும் ணத்துயரங்கொண்டு, சேர்மதனசிகாமணிகூற்ருகும ந்த, தகவில்பரத்தையர்மாலை கேட்போரெலலாஞ்சால மிகச்செரும்பரத்தைமாரைநீங்கி. மகிமைபெறுமறை க்காட்டம்மானைவாழ்த்தி, மனையறம்வாழ்ந்தினிதுவா ழ்ந்துப்பாரே. ௱க

பரத்தையர்மாலை-முற்றிற்று.